பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

28 04 2024 **SUNDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசு கடனுதவி வழங்கியுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.
2. விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி திட்டத்தை செயல்படுத்த நிரந்தர ஆணையம் ஏற்படுத்தப்படும் என்று காங்கிரஸ் உறுதி அளித்துள்ளது.
3. இளையோர் படிப்புடன் விளையாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
4. கோடை கால பயிற்சி முகாமிற்கு பள்ளி மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதை திமுக அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.
5. உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில், 10 கோடிக்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கர்நாடக மாநிலம் **Belagavi** –வில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

விவசாயிகளின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

உழவர் உற்பத்திக்குழுக்கள் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டதன் மூலம், சிறு விவசாயிகள் பயனடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தியிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்தியில் ஆட்சிப்பொறுப்பேற்றால் விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி திட்டத்தை செயல்படுத்துவதற்காக நிரந்தர ஆணையம் ஏற்படுத்தப்படும் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

மகளிர் நலனுக்கான பல்வேறு உறுதிமொழிகளும் இதில் இடம்பெற்றிருப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தல் நிறைவடைந்த தொகுதிகளில், வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகள் எவ்வித குறைகள் இன்றி கண்காணிக்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீலகிரி மாவட்டத்தில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு அறையின் கண்காணிப்பு கேமராக்களின் திரைகள் 20 நிமிடம் பழுதாகியதாக குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்பங்களை கொண்டு 24 மணிநேரமும் உரிய வகையில் கண்காணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

இளையோர் படிப்புடன் விளையாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், உடலையும், மனதையும் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ள விளையாட்டு உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மிக இளம் வயதில் **Candidates** செஸ் போட்டியில் பட்டம் வென்ற குகேஷிற்கு 75 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகையை இன்று தாம் அவருக்கு வழங்கி வாழ்த்தியதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

கோடை கால பயிற்சி முகாமிற்கு பள்ளி மாணவர்களிடம் திமுக அரசு கட்டணம் வசூலிப்பது கண்டிக்கத்தக்கது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவர்களை முடக்கும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டிற்கு ஊக்கம் அளிக்கப்படும் என்று கூறிக்கொண்டு, திமுக அரசு கட்டணம் வசூலிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வழக்கம் போல, கோடைகால சிறப்பு பயிற்சி முகாமிற்கு எவ்வித கட்டணமும் வசூலிக்கக்கூடாது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

**<<<<<<>>>>>**

தமிழக அரசு கோரியுள்ள இயற்கை பேரிடர் நிவாரண நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலர் திரு முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசு 37 ஆயிரத்து தொள்ளாயிரத்து ஏழு கோடி ரூபாய் கோரியுள்ள நிலையில், குறைந்த தொகையை விடுவித்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ-வும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

**<<<<<<>>>>>**

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை உடனடியாக வலுப்படுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசுப்பள்ளிகளை மேம்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

புதிய வகுப்பறைகளை கட்டுவதற்காக ஏழாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் புதிய வகுப்பறைகள் கட்டப்படவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

வகுப்புக்கு குறைந்தது ஒரு ஆசிரியரை நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு ராமதாசு அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

**<<<<<<>>>>>**

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் அடுத்த ஐந்து தினங்களுக்கு இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 58 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, ஏற்காடு வனப்பகுதியில் வன உயிரினங்களுக்கு தண்ணீர் தொட்டிகள் மாணவர் இளைஞர் பேரவை சார்பில் அமைக்கப்பட்டு வருவதாக அதன் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - ஒருங்கிணைப்பாளர் - 45 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

மாவட்டச் செய்திகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் உயர் விளைச்சல் பெற தரமான சான்று விதைகளை பயன்படுத்த வேண்டும் என்று வேளாண் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

--------------

பெங்களூரு – கோயம்புத்தூர் இடையேயான வந்தேபாரத் விரைவு ரயில் நாளை தொடங்கி, அடுத்த மாதம் 28-ஆம் தேதிவரை பிற்பகல் மணி இரண்டு 20-க்கு பதிலாக, மணி மூன்று 15-க்கு புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

---------------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் ரோப் கார் சேவை பராமரிப்புப்பணிகள் காரணமாக நாளை ஒருநாள் மட்டும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் சுவாமி திருக்கோவில் சித்திரை தேர் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**<<<<<<>>>>>**

விளையாட்டுச் செய்திகள்

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் தீபிகா குமாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

சீனாவின் ஷாங்காயில் நடைபெற்ற இப்போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா 5 தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றது.

-----------

**Uber** கோப்பை பேட்மிண்டன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் **Chengdu** –வில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா 4-1 என்ற ஆட்டக்கணக்கில் சிங்கப்பூரை வென்றது.

----------

தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4-1 என்ற ஆட்டக்கணக்கில் தாய்லாந்தை வென்றது

--------------

துபாயில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா 7 தங்கம், 11 வெள்ளி, 11 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தை பிடித்தது.

--------------------

உலக **Cadet** செஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

அல்பேனியாவின் **Durres**-ல் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் பிரிவில் இந்தியாவின் **Divith Reddy Adulla** பத்து புள்ளிகளுடனும், மகளிர் பிரிவில் **Sharvaanica** ஒன்பது புள்ளிகளுடன் தங்கப்பதக்கத்தை வென்றனர்.

----------

தில்லியில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Suraj Kumar Chand** ஆடவர் பிரிவிலும், **Anahat Singh** மகளிர் பிரிவிலும் பட்டம் வென்றனர்.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணிக்கு எதிராக 201 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் பெங்களூரு அணி சற்றுமுன்வரை 11 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 110 ரன் எடுத்துள்ளது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 200 ரன் எடுத்தது.

சென்னையில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் சென்னை அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

---------------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் 146 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் பங்களாதேஷ் சற்றுமுன்வரை 16 புள்ளி ஒரு ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 81 ரன் எடுத்துள்ளது.

பங்களாதேஷின் **Sylhet** –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 145 ரன் எடுத்தது.

**<<<<<<END>>>>>**